தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை–600 035.

தொலைபேசி எண்.044–2951 5590

ஆணை நாள். 18.11.2026

காணொளி காட்சி விசாரணை

முன்னிலை

திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,

மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண் : SA 12129/A/2024

திரு. அ. ராஜகுரு .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஆலங்குடி வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம் – 622 301. .. பொது அதிகார அமைப்பு

ஆணை

மேற்குறிப்பிட்ட வழக்கு 18.11.2026 அன்று ஆணையத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு. அ. ராஜகுரு அவர்கள் நேரில் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)–ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு. அ. திருப்பதி வெங்கடாசலம், பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், ஆலங்குடி வட்டம், புதுக்கோட்டை மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 13.07.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)–ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், வருவாய்த்துறையால் வழங்கப்படும் இறப்புச் சான்றிதழில் திருத்தம் (Correction) செய்வதற்கு எந்த அலுவலருக்கு அதிகாரம் உள்ளது. (2) கிராமப்புறங்களில் அரசு நத்தம் புறம்போக்கில் அரசு ஊழியர்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா எத்தனை சென்ட் வழங்கப்படுகிறது. எந்த வருடத்தில் இருந்து நடைமுறையில் உள்ளது. (3)

சேந்தன்குடி கிராமம் நத்தம் புல எண் 110, உட்பிரிவு 17B, பழைய புல எண் 110-17,ஏர்ஸ் 0-3.05 பெருமாள் சேர்வை மகன் பெ.பொண்ணுச்சாமி பிற சமூகத்தை சேர்ந்தவருக்கு ஆதிதிரவிட்டருக்கு சொந்தமான நிலத்தை எதன் அடிப்படையில் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அரசின் வழிமுறைகளை தகவல்களாக வழங்குமாறும், (4) கிராமங்களில் உள்ள நத்தம் புறம்போக்கு ஏழைகளுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா முதல் முதலாக எந்த வருடத்தில் அமல்படுதப்பட்டது என்பது போன்ற தகவல்களை 4 இனங்களில் தகவல் வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 12.08.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார். அத்தகவலில் திருப்தியடையாத மனுதாரர் 13.08.2024 நாளிட்ட பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் பதில் வழங்காத காரணத்தினால் மனுதாரர், 14.09.2024 நாளிட்ட பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 18.11.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து காணொளி காட்சி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு 17.11.2026 நாளிட்ட கடிதம் வாயிலாக அனைத்து இனங்களுக்கான தகவல்களை வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார். மேலும், மனுதாரரும் தான் கோரிய தகவல்கள் அனைத்தும் மனநிறைவு அளிக்கும் வகையில் பெற்றுக் கொண்டதாக ஆணையத்திற்கு மனநிறைவு கடிதம் வழங்கியுள்ளார். அக்கடிதத்தின் அடிப்படையில், இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)
மாநில தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்



வழக்கு எண் SA- 12129/A/2024

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஆலங்குடி வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம் - 622 301.

மனுதாரர்:

திரு. அ. ராஜகுரு,
சேந்தன்குடி நகரம் அஞ்சல்,
கீரமங்கலம் வழி
ஆலங்குடி வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம் - 614 624.

Copy to File
Je/PA 19.11.2026

DESPATCHED